1973 நவம்பர் 19]

டாக்டர் ச. மு. பழனியப்பன்: புதுக்கோட்டையிலுள்ள மாதிரிப் பள்ளியைப் போல, விடுதியுடன் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஏற்படுத்த அடுத்த ஆண்டாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதற்கு நிதி வசதி இடம் தரவேண்டும். புதுக்கோட்டை மாதிரிப் பள்ளியைச் சிறப்பாக அமைத்து, அதன் பிறகு மற்ற மாவட்டத் தலைநகரிலும் வைப்பதுபற்றி யோசிக்கலாம்.

அரசிதழ் பதிவுறு அலுவலர்களுக்கென தனி மருந்தகங்கள்

*158 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.ஜி.ஜி.ஓக்களுக்கு தனி மருந்தகங்களைத் திறக்க அரசு உத்திரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எங்கெங்கே திறக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) ஒரு விவரப் பட்டியல் @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: என்.ஜி.ஓ.க்களுக்கு என்று தனி மருந்தகங்களைத் திறக்க அவசியம் என்ன என்று அறியலாமா

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: என்.ஜி.ஓ.க்களுக்கு என்று மருத்துவமனை தனியாக இல்லை. அவர்கள் பொது மருத்துவமனைக்குச் சென்று குறிப்பிட்ட நேரத்திற்குள் அலுவலகத்திற்குத் திரும்புவதற்கு வசதியாக—பொது மருத்துவமனையில் ஒரு தனிப் பிரிவில் ஒரு டாக்டர் இருந்து கவனிக்க ஏற்பாடு இருக்கிறது. இது 1960-ம் ஆண்டிலேயே அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முடிவு. அந்த முடிவின்படியே பொது மருத்துவமனையில் ஒரு டாக்டர், அவர்களைத் தனியாகக் கவனித்து அனுப்பும் ஏற்பாடு இருக்கிறது. என்.ஜி.ஓ.-க்கள் நேரத்தில் அலுவலகத்திற்கு வர இது அவசியமான ஒரு ஏற்பாடு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அமைச்சர் கொடுத்துள்ள விவர அறிக்கையின்படி 26 இடங்களில் என்.ஜி.ஓ.க்களுக்கு தனி மருந்தகங்கள் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். மதுரையில் 1961-லேயே உத்தரவு போட்டு

@ 118-119-ம் பக்கங்களில் இணைப்பு 2-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திறக்கப்பட்ட பிரிவு இன்னும் வளர்ச்சி அடையாமல் அப்படியே இருக்கிறது, 60, 61-ல் ஆரம்பிக்கப்பட்ட தனி மருந்தகங்கள் எவ்வளவு மேற்கொண்டு விரிவு படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லமுடியுமா? இல்லையானால் இனியேனும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : என்.ஜி.ஓ.க்கள் புற நோயாளிகளாக—அவுட் பேஷண்டு—களாக பொது மருத்துவ மனைக்குப் போகிறபோதுதான் உடனடியாக அவர்களைக் கவனித்து அலுவலங்களுக்கு அனுப்ப வேண்டும் என்கிற நோக்கத்தில் இந்தத் தனிப் பிரிவுகள் அங்கே ஏற்படுத்தப்படுகின்றன. அவர்கள் உள்நோயாளிகளாக இருந்து சிகிச்சை பெறவேண்டுமானால் மருத்துவ மனைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டு மற்ற டாக்டர்களால் கவனிக்கப்படுகிற நிலையும் இருக்கிறது. ஆகவே, தனி மருந்தகங்கள் விரிவு படுத்தப்பட வேண்டும் என்கிற நிலை இல்லை. எல்லா மாவட்ட மருந்தகங்களிலும் இத்தகைய தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் நிலை. அப்படி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. வருகிற ஆண்டில் புதுக்கோட்டை, ஈரோடு ஆகிய இடங்களிலும் ஏற்படுத்த ஆலோசனை இருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : என்.ஜி.ஓ.க்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தத் தனி மருந்தகங்களில் குறிப்பிட்ட நேரத்தில் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களும், ஆசிரியர்களும் சிகிச்சை பெற வசதி ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : என்.ஜி.ஓ.க்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் யார் யாருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்கள் இங்கே சிகிச்சை பெறலாம். தொழிலாளர்களுக்குத் தனியாக இ.எஸ்.ஐ. மருந்தகங்கள் இருக்கின்றன. அவை மூலமாக அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

கோவையில் குழந்தைகளுக்கென தனி மருத்துவ மனை

* 159 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவையில் குழந்தைகளுக்கு தனி மருத்துவ மனை துவக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.